# மழை

கண்ணன், சரஸ்வதி வித்யாலயாவில் ஒன்றாம் வகுப்பு படிக்கும் மாணவன். அவனுடைய வீடு பள்ளிக்கு அருகில் இருப்பதால் தினமும் நடந்தேசெல்வான். ஒருநாள் பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான். தான் வரைந்த ஓவியத்தை அம்மாவிடம் காட்ட வேண்டும் என்று ஆசையாக வந்தான். அப்போது மழை பெய்தது. எங்கேயும் ஒதுங்க முடியவில்லை. அவனுடைய ஓவியம் மழையில் நனையத்தொடங்கியது.

கண்ணனுக்கு அழுகை அழுகையாக வந்தது. கோபத்துடன் மழையைப் பார்த்து மழையே!... உன்னை யார் பெய்யச் சொன்னது?........ என்று கேட்டான்.

மன்னித்துவிடு!..... கண்ணா.....

யாரது?...

நான்தான் மழை...

மழை பேசுமா?

குழந்தைகளிடம் மட்டும்தான் பேசுவேன்.

பேசுவாயா?....

உன் ஓவியத்தை அழித்துவிட்டேன் அல்லவா!...... மன்னிப்புக்கேட்பதற்காக பேசினேன்.

ஓ...... ஓஓ.......

நீ... எதற்காக பெய்தாய்?.

உனக்குத் தண்ணீர் தருவதற்காகத் தான் பெய்தேன்.

என்ன.............? எனக்காகவா!.

உனக்காகமட்டுமல்ல!........எல்லோருக்காகவும் தான்... காலம் தவறாமல் நான் பெய்ய வேண்டும். மேலும் நான் அதிகமான மழையைத் தருவதால், மக்கள் என்னை ஏரி, குளம், மற்றும் அணைகளிலும் சேமித்து வைத்து பின் அவர்கள் தேவைக்கேற்ப என்னை பயன்படுத்துகின்றனர்.

விலங்குகளும் உன்னைத்தானே குடிக்கின்றன!.............?

சரியாகச் சொன்னாய்!..... அதுமட்டுமல்ல சிறிய புல் முதல் பெரிய ஆலமரம் வரை செழிப்பாய் வளர நான் மிகவும் அவசியம்.

அதனால் தான் மழை வளம் நாட்டின் வளம் என்பார்களோ?.........................!

ஆமாம். சரி நான் போகிறேன்.

எங்கே?

பருவக்காற்று வீசும் திசையில் பறந்து போகிறேன்.

சரி,,,சரி..,, உன்னைப் பற்றி நான் நெறையா தெரிந்து கொண்டேன். உன்னைத் திட்டியதற்கு என்னை மன்னிப்பாயா............

பரவாயில்லை கண்ணன், உன் ஓவியம் மிகவும் நன்றாக இருந்தது. நான் தான் அழித்துவிட்டேன்.

அதனால் என்ன!............. மறுபடியும் வரைந்து கொள்கிறேன்.

சரி..........கண்ணன் இன்னொருநாள் பார்க்கலாம், என்று மழை சென்றதும் கண்ணன் மழை நீரில் விளையாடிக்கொண்டே வீட்டிற்கு சென்றான்.